# விபஸ்ஸனா செய்தி மடல்

## தமிழ் மாத இதழ்

(விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர்: 1 ★ இதழ்: 5 ★ வைகாசி: 2022 ★ விலை: ₹ 2.50/- ★ ஆண்டு சந்தா : ₹ 30/-


### புத்தரின் வெற்றியையும் தீயசக்திகளின் தோல்வியையும் பறைசாற்றும் பாசுரங்கள்

**ஜயோ ஹி புத்தஸ்ஸ ஸிரீமதோ அயங்**
**மாரஸ்ஸ ச பாபிமதோ பராஜயோ**
**உக்கோஸயங் போதிமண்டே பமோதிதா**
**ஜயங் ததா நாககணா மஹேஸினோ**
**ஜயங் ததா ஸுபண்ணகணா மஹேஸினோ**
**ஜயங் ததா தேவகணா மஹேஸினோ**
**ஜயங் ததா பிரம்மகணா மஹேஸினோ**

*மாமுனிவரும் போற்றத்தக்கவருமான பகவான் புத்தர், தீய சக்திகளை வென்றதும், அங்கு அரச மரத்தடியில் வசித்து வந்த நாகர்களும், கருடர்களும், தெய்வங்களும், பிரம்மர்களும் புத்தரின் வெற்றியையும் தீய சக்திகளின்தோல்வியையும் பறைசாற்றினர்.*

# வைகாசி பௌர்ணமியின் முப்பெரும் அருளாசிகள்

அன்பார்ந்த தியானிகளே

நாம் நமது உண்மையான நன்மையை அடைவோமாக! இந்த வைகாசி பௌர்ணமி நம்மை தூய தம்மத்தின் பாதையை நோக்கி பயணிக்க ஊக்குவிக்கட்டும்!

எண்ணிலடங்கா பிறவிகளாக போதிஸத்துவர் சித்தார்த்த கௌதமர் தானம், சீலம்(ஒழுக்கம்), நேக்கம்ம(துறவு), பஞ்ஞா(ஞானம்), விரிய (முயற்சி), கந்தி (பொறுமை), ஸச்ச (உண்மை), அதிட்டான (திடதீர்மானம்), மெத்தா (பேரன்பு) மற்றும் உபேக்கா (உள்ளச் சமநிலை) ஆகிய பத்து நற்பண்புகளைத் (பாரமிதாக்கள்) தமக்குள் பூரணமாக்கினார். இந்த புனிதமான நாளன்று தான் அவர் பிறந்தார். இதுவே அவரது கடைசி பிறவியாகவும் இருந்தது. நாம் அவரைப் பின்பற்றி நமது நற்பண்புகளையும் பூரணமாக்கி, அதனோடு நாம் எடுக்கும் பிறவியை கடைசி பிறவியாக ஆக்குவோமாக!

வைகாசி பௌர்ணமியின் அந்த இரவு, போதிஸத்துவர் சித்தார்த்த கௌதமர், தனது மனதில் ஆழ்ந்து கிடக்கும் மனமாசுகளைத் தூய்மைப்படுத்தி, முழு மெஞ்ஞானத்தை அடைந்தார். நாமும் சீலம், சமாதி மற்றும் பஞ்ஞா (ஒழுக்கம், மனக்குவிப்பு மற்றும் ஞானம்) ஆகியவற்றை பயிற்சித்து, நமது மனமாசுக்களை அழித்து, நிப்பாண என்னும் இறுதி உண்மையை அனுபவிப்போமாக.

முழு மெஞ்ஞானத்தை அடைந்த பிறகு, மாபெரும் கருணையுள்ளம் கொண்ட புத்த பகவான் தொடர்ந்து, அயராது, நாற்பத்தைந்து வருடங்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டி, தமது எண்பதாவது வயதில், வைகாசிபௌர்ணமி தினத்தன்று, மகாபரிநிப்பாணத்தை அடைந்தார். இதுவே அவரது இறுதி இறப்பாகும். நாமும் நம்சொந்த நலனிலும், மற்றவர்களின் நலனிலும் நம்மை நாமே ஈடுபடுத்திக்கொண்டு, இறுதி இறப்பாகதிகழக்கூடிய ஒரு இறப்பை அடைவோமாக! புனிதமான இந்த வைகாசி பௌர்ணமி தினத்தின் புண்ணியம் நிறைந்த முப்பெரும் அருளாசியானது நம்மை சிரத்தையுடன் தம்மத்தைப் பயிற்சிக்க ஊக்குவிப்பதாக! இந்தப்பயிற்சியில் தான் நமது உண்மையான நலன் அடங்கியுள்ளது.

தியானிகளே, வாருங்கள், உங்களது உண்மையான நன்மையை நோக்கி பயிற்சி செய்யுங்கள்!

## உண்மையை உணர்ந்தறிதல்

இளம் யோகியான சித்தார்த்த கௌதமர் தன் மனதின் மீது அடைந்த ஒப்பில்லா வெற்றியின் மூலம் வைகாசிபௌர்ணமியின் புனித இரவானது உண்மையில் அருளப்பெற்றதாயிற்று. அறியாமையின் இருள் முழுமையாக அகற்றப்பட்டது. மனதின் உள்ளாழங்களில் உள்ள மிக நுட்பமான மாசுக்களும் கழுவப்பட்டு, முழுவதும் தூய்மைப்படுத்தபட்ட ஒரு தம்ம பார்வை கிடைத்தாயிற்று. எண்ணிலடங்கா பிறவிகளில் உழன்றுகொண்டிருந் தஸங்காரங்கள் பலவும் அழிக்கப்பட்டன. கர்ம வினைகள் யாவும் உடைந்து, அவரது மனம் கட்டுக்கள் ஏதுமின்றி விடுதலைஅடைந்தது. எதிர்காலத்தின் ஆசை ஏதும் இன்றி, மனப் பிரமைகளின் மூடுபனியும் கழுவப்பட்டது. இறுதி உண்மை அடைந்தாயிற்று. எண்ணிலடங்கா பிறவிகளின் தூய முயற்சி பலனடைந்தது; போதிஸத்துவர்சித்தார்த்த கௌதமர் ஸம்மா ஸம்புத்தரானார்.

ஒப்பில்லா இந்த விடுதலையின் அமுதத்தை சுவைத்த மகிழ்ச்சியில், ஸம்மா ஸம்புத்தர் இவ்வாறான ஊக்குவிக்கும் அர்த்தமுள்ள பாசுரத்தை உரைத்தார்:

**அநேகஜாதி ஸம்சாரங், ஸந்தாவிஸ்ஸங் அநிப்பிஸங்;**
**கஹகாரகங் கவேசந்தோ, துக்கா ஜாதி புனப்புனங்.**
**கஹகாரக திட்டோஸி, புன கேஹங் ந காஹஸி;**
**ஸப்பா தே பாஸுகா பக்கா, கஹகூடங் விஸங்கதங்;**
**விஸங்காரகதங் சித்தங், தன்ஹானங் கயமஜ்ஜகா**

இந்த பிறப்பிறப்பு சுழற்சியில், பல எண்ணிலடங்கா பிறவிகளை நான் எடுத்துக்கொண்டு, இந்த வீட்டை கட்டியவரைத் தேடிக்கொண்டு அலைந்தேன். ஆனால் அவ்வாறு எவரையும் கண்டுகொள்ள முடியவில்லை; மீண்டும் மீண்டும் இதற்காக புதிய பிறப்பின் துன்பத்தையும் சந்தித்தேன். வீட்டைக் கட்டியவரே! இப்போது நீ பார்க்கப்பட்டுவிட்டாய். இன்னொரு வீட்டை இனி நீ எனக்காக கட்ட இயலாது. உன்னுடைய உத்திரங்களும் முகடு கம்பங்களும் தகர்க்கப்பட்டன. மனம் கட்டுக்களிலிருந்து விடுதலை அடைந்தது; வேட்கையின் முடிவு அடைந்தாயிற்று.

*(தம்மபதம் 153-154, ஜராவக்க)*

முழு மெஞ்ஞானம் அடைவதற்கு முன்பு, அவர் அடைந்த தியான ஸமாதிகளினால் (மனக் குவிப்பு) அடைந்தசித்திகளின் மூலம் சித்தார்த்த கௌதமர் தாம் எடுத்த பல முற்பிறவிகளை ஆராய்ந்து, என்றும் மாறிக்கொண்டே இருக்கும் இந்தப் பிறவிச் சுழற்சியில் தாம் எண்ணிலடங்கா பிறவிகள் எடுத்துள்ளதை கண்டார். இறப்பை நோக்கிப் போவதற்கே நாம் பிறப்பை எடுக்கிறோமா என்றும் அவர் கருதினார்.

மீண்டும்மீண்டும்எனக்குஒருபுதியபிறவியைக் கொடுப்பவர் யார்? ஒவ்வொரு இறப்பிலும் ஒரு புதிய ஜனனத்தை உருவாக்குபவர் யார்? எனக்கான ஒரு புதிய வீட்டைக் கட்டுபவர் யார்? இந்த வீடு கட்டுபவரைத் தேடிக்கொண்டே பல பிறவிகளில் நேரத்தை வீணடித்து விட்டேன். இந்தத் தேடுதலுக்காகவே நான் துன்பம் நிறைந்த பிறவிகளை எடுக்க வேண்டியிருந்தது. இந்தப் பிறவியில் நான் முழு மெஞ்ஞானத்தை அடைந்துவிட்டேன்; உண்மை அனைத்தும் என் கண்கள் முன்னே வெளிப்பட்டன. நான் அந்த வீடு கட்டுபவரை பார்த்துவிட்டேன்; வீடு கட்டும் மூல பொருட்களையும் அழித்துவிட்டேன். இனி எனக்காக வீடு கட்ட இயலாது. வீட்டின் மூல பொருட்கள் யாவும் சிதைந்து போயின; புதிய வீடு கட்டுவதற்கு இனி எந்தவோர் அடித்தளமும் இல்லை. மனம் முழுவதுமாக தூய்மை அடைந்ததால், ஸங்காரங்கள் ஏதுமின்றி உள்ளது. பழைய பற்றின் எல்லாசுவடும் நீக்கப்பட்டது. எதிர்காலத்தைப் பற்றிய எந்தவொரு ஆசையும் இல்லாததால், இனி புதிய பற்றினை உருவாக்க வாய்ப்பும் இருப்பதில்லை. வேட்கை அனைத்தும் (புலன் இன்பங்களின் வேட்கை, பிறவி எடுப்பதற்கான வேட்கை மற்றும் பிறவி எடுக்காமல் இருப்பதற்கான

வேட்கை) வேருடன் பிடுங்கப்பட்டன.

முழு மெஞ்ஞானம் பெற்றவரான ஸம்மா ஸம்புத்தர் பார்த்த அந்த வீடு கட்டுபவர் யார்? பௌர்ணமி இரவன்று நடந்த முழு விடுதலைக்கான போராட்டத்தில் பார்க்கப்பட்டவர் யார்? 'மார' என்பவர் தான் வீடுகட்டுபவர். ஆனால் யார் இந்த மார? ஆழ்மனதில் அடங்கிக் கிடக்கும் நமது ஸங்காரங்களின், நமது மனமாசுக்களின் மொத்த உருவகமே இந்த மார என்றழைக்கப்படும் சொல்லாகும். உண்மையில், இந்த மார தான் மீண்டும் மீண்டும் புதிய வீடுகளைக் கட்டிக் கொண்டும், நமக்காக புதுப் பிறவிகளை எடுக்கவும் வைக்கிறது. ஆனால் இப்போது இந்த மார முற்றிலும் வலுவிழந்துவிட்டது; அதன் படைபலம்போய்விட்டது; பலவீனமாகிவிட்டது. வீட்டை இனி அது கட்ட இயலாது; அதைக் கட்டுவதற்கான காரணிகள் அதாவது தேங்கிக் கிடக்கும் ஸங்காரங்கள் அனைத்தும் உடைந்து போய்விட்டன.

நெருப்புக்கு எரியூட்டும் பொருள் செலவழியும் போது நெருப்பும் தாமாகவே அணைந்துவிடும். "கீணங் புராணங்நவங் நத்தி ஸம்பவங்", பழையவை அழிதலும் புதியவை ஏதும் உருவாக்காமல் இருத்தலும் - இதுவே விடுதலைநிலையாகும். போதிஸத்துவரின் முழு மெஞ்ஞானமும் இதுவே. இதுவே இருள் மீது வெளிச்சம் கொண்ட வெற்றியாகும். இதுதான் மரணத்தின் மீது மரணமில்லாததன் வெற்றியாகும். இதுவே பொய்மை மீது உண்மையின் வெற்றி.

எனினும், சித்தார்த்த கௌதமர் கண்ட இந்த ஒப்பில்லா வெற்றியை நாம் கேட்டதும் பூரிப்பு அடைந்து, "இந்த வெற்றி மங்களகரமானதாகுக" என்று வெறும் பிரகடணம் செய்வதனால் மட்டும் நமக்கு எந்தவொரு பலனும் வரப்போவதில்லை. தன்னை அறிவதனாலும், இறுதி உண்மையை உணர்ந்து பூரண விடுதலை அடைவதாலுமே நமக்கு உண்மையான நன்மை கிட்டும். சித்தார்த்த கௌதமரின் இந்த மகத்துவமிக்க வெற்றியால் நாம் உண்மையில் ஊக்கம் அடைந்து, அவர் வழிவகுத்த இந்தப் பாதையில் நடந்து, இந்தப் பிறவியிலேயே மனத்தூய்மையாக்கத்தை அடைவோமாக! இதுவே நமக்கு உண்மையான மகிழ்ச்சியை தரக்கூடியதாகும். ஆகவே, சித்தார்த்த கௌதமரின் முழு மெஞ்ஞானம் என்னவென்பதையும் அதனை அவர் எவ்வாறு அடைந்தார் என்பதையும் நாம் புரிந்து கொள்வோமாக!

இது கண்களுக்கு புலப்படாத ஏதோவொரு தெய்வீக சக்தியின் அருளாசியால் நிகழ்ந்த ஒரு அதிசயமான, ஆச்சரியமான நிகழ்வு அன்று. மாறாக, இது ஒரு மனிதன் மேற்கொண்ட அயரா உழைப்பின் முடிசூடா சாதனையாகும். இது ஏதோவொரு கற்பனை சார்ந்த, வெறுமையான அறிவுசார் புரிதலும் அல்ல, கண்மூடித்தனமான பக்தியினால் தோன்றும் பயனற்ற உணர்வு வெளிப்பாடும் அல்ல. இது பூரணமெஞ்ஞானமாகும்; தவறான கற்பனையின் அல்லது போலியான உணர்வு வெளிப்பாட்டின் துணை கொள்ளாமல், அனுபவ அளவில் இறுதி உண்மையை உணர்தலாகும். இந்த இரு மாசுக்களையும் நெருங்க விடாமல் தூர தள்ளிவைப்பதாலேயே நாம் பூரண மன தூய்மையாக்கத்தை அடைய முடியும்.

மனம் எல்லையில்லா ஞானத்தையும் தூய்மையையும் அடைந்தது. பொய்மையான உணர்வுவாதம்ஏதும்இன்றி மனம்எல்லையில்லா, களங்கமற்ற தூய பேரன்பையும் கருணையையும் அடைந்தது. சுயசார்பின், தன்னம்பிக்கையின் பலத்தினால் இவை அனைத்தும் அடைய முடிந்தது. ஒன்றின் மீது சார்பினைக் கொண்டு ஒருவர் எவ்வாறு சுதந்திரமாகவும் சார்பின்றியும் இருக்க இயலும்? அவ்வாறான அந்த நபர் எவ்வாறு விடுதலை பெற்றிருக்கக் கூடும். ஒரு மனிதன் தனக்குள் நிகழும் போராட்டங்களைத் தாமே சந்திக்க வேண்டும். அவர் தன்சொந்த மன அழுக்குகளையும் தவறான நம்பிக்கைகளையும் எதிர்கொள்ள வேண்டும். இந்த அகப்போராட்டத்தில், அறியாமை சிதறி, இருளிலிருந்து உண்மையின் பிரகாசம் வெளிவரத் துவங்கும்.

உண்மையைத் தேடும் ஒருவர் தம்முள் என்ன நிகழ்கிறதுஎன்பதைத்தெரிந்துகொண்டு,அவ்வாறு நிகழ்வதற்கான காரணம் என்னவென்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு காரணத்தால் ஏற்படும் எந்தவொரு நிகழ்விற்கும் வெளியேறும் வழியும் ஒன்றிருக்கும் என்பதை அவர் தெரிந்துகொள்கிறார். காரணங்களிலிருந்து வெளியேறும் வழியையும் கண்டறிகிறார். காரணங்களைப் புரிந்துகொண்டு, தீர்வுகளையும் அவர் தாமே கண்டறிந்து, பந்தத்திலிருந்து விடுதலை அடைகிறார். பிறகு, மேகங்கள் இல்லா வானத்தில் சூரியன் பிரகாசிப்பது போல், இதுவே உண்மையான இறுதி விடுதலை என அவர் புரிந்துகொள்கிறார்.

எண்ணிலடங்கா பிறவிகளிலும், இப்பிறவியிலும் அளைந்துதிரிந்து, பல்வேறு

பயிற்சிகளில் நேரத்தை தொலைத்து, இறுதியில் இந்த மாமனிதர் ஒரு எளிமையான, நேரடியான பயிற்சியைக் கண்டறிந்து, நமக்கான ஒரு பரம்பரைச் சொத்தாக அதனை விட்டுச் சென்றார். அதனை நன்கு பயன்படுத்துவதன் மூலம், அவர் அடைந்த அதே பலனை நாமும் அடையலாம்.

பயிற்சியின் அந்த பாதை தான் என்ன? உள்ளது உள்ளபடியான உண்மையை தொடர்ந்து கவனித்தலும், தூலமான உண்மையைக் கவனிக்க துவங்கி அதன் நுட்பமான நிலை அடையும் வரை தொடர்ந்து கவனித்தலும் ஆகிய இந்த இரண்டும் தான் இந்த பாதையாகும். உண்மையின் இந்தத் தேடல் வெற்றியடைய வேண்டுமெனில், தவறான பழைய நம்பிக்கைகளும் பாரபட்சங்களும் அகன்று, அனுபவ அளவில் நம்முள் எழும் உண்மைகள் யாதொன்றையும் உள்ளது உள்ளபடி ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே நம்மை இறுதி உண்மை வரை எடுத்துச்செல்லக்கூடிய 'உள்ளது உள்ளபடியான' இயல்பை பார்த்தலின் ஞானமாகும். கற்பனைக்கோ அல்லது உணர்ச்சிவயப்படுவதற்கோ இதில் இடமில்லை. இந்த இரண்டினையும் ஒதுக்கிவிட்டு ஒரு விஞ்ஞானியைப் போன்று, ஒரு ஆராய்ச்சியாளரைப் போல இறுதி உண்மையை நாடி அவர் வெற்றி பெற்றார்.

சித்தார்த்த கௌதமர் திறந்த வெளியில் தான் பிறந்தார்; திறந்த வெளியில் தான் முழு மெஞ்ஞானம் அடைந்தார்; திறந்த வெளியில் தான் மகாபரிநிப்பாணத்தையும் எய்தினார். அவரது வாழ்வின் மூன்று முக்கிய நிகழ்வுகள் (மைல்கற்கள்) திறந்த வெளியில் வானத்தின் கீழ் தான் நிகழ்ந்தன. தனது வாழ்நாள் முழுவதும் அவர் இயற்கையை ஆழமாகவும் நெருக்கமாகவும் கவனித்தறிந்தார். இந்த உலகில் எந்தவொன்றும் நிலையாக இருப்பதில்லை; அனைத்தும் ஒரு ஓட்டத்தில் தான் உள்ளது என்பதனை அவர் கண்டார். ஒவ்வொரு கணமும் ஏதோவொன்று நிகழ்கிறது. ஒவ்வொரு கணமும் ஏதோவொன்று உருவாகிறது, ஏதோவொன்று மாறுகிறது. உருவாக்கம், மாற்றம் - இதுவே இந்த உலகின் இயல்பாகும். ஆகவே தான் இது 'பவ ஸங்காரம்' அதாவது உருவாதலின் உலகம் என்று கூறப்படுகிறது. மிக நுட்பமான மட்டத்தில் ஏதோவொன்று மாறிக்கொண்டே இருக்கிறது. உயிருள்ள எந்தவொன்றும் மாறிக்கொண்டே தான் இருக்கிறது. வெளியே என்ன நிகழ்கிறதோ அது ஒவ்வொரு கணமும் ஒவ்வொருவருக்கும் உள்ளேயும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஏதோவொன்று மாறுகிறது.

அவர் உள்முகப்பட்டு இந்த உண்மையைப் பார்த்தார்; இயற்கையின் உண்மை அனைத்தும் தாமே வெளிப்பட்டது. நான், எனது என நாம் கூறிக்கொள்ளும் இந்த உடல் மற்றும் மேல்மட்ட நினைவு மனம் மீதுஒருவர் மேன்மேலும் சிக்குண்டு, ஒரு தடித்த சணல் தண்டைப் போல இருகிவிடுகிறார். போதிஸத்துவருக்கு இயற்கை தனது முழு இயல்பை தம்மைத் தாமே வெளிபடுத்திக்கொண்டது. புலப்பரப்பின் அநித்ய இயல்பும், புலப்பரப்பினைக் கடந்த நித்யமான நிப்பாண நிலையின் உண்மையும் தாமே வெளிப்பட்டன.

இவ்விதமே, அனுபவ அளவில் துன்பத்தைப் பற்றிய உண்மை உணர்ந்துகொள்ளப்பட்டது; துன்பத்திற்கான காரணமும் தாமே வெளிப்பட்டது; துன்பத்திலிருந்து முழு விடுதலையான நிலை இறுதி உன்னத உண்மையாக உணரப்பட்டது.

வாருங்கள், நாமும் அனுபவ அளவில் இந்த பௌதீக உடல் என்னவென்பதையும், இந்த மனமும் புலனறிதலும் என்ன என்பதையும், வாழ்க்கை ஓட்டத்தை மேலும் மேலும் தொடரச் செய்வது எதுவென்பதையும், மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன என்பதையும், பேதமையால் மனதில் முடிச்சுக்கள் எவ்வாறு பெருக்குகின்றன என்பதைப் பற்றியும், எவ்வாறு வெறுப்பும் சினமும் வளர்கின்றன என்பதையும், பழைய முடிச்சுகளை எவ்வாறு அவிழ்ப்பது என்பது பற்றியும், இந்த குழப்பம் அனைத்தையும் எவ்வாறு தெளிவுப்படுத்துவது என்பதையும், எவ்வாறு ஒருவர் இறுதி உண்மையை அனுப்பவிப்பதன் மூலம் பூரணவிடுதலையை சுவைக்க முடியும் என்பது பற்றியும் அனுபவ அளவில் புரிந்து உணர்ந்துகொள்வோம். இதுவே வைகாசி பௌர்ணமியின் ஊக்குவிப்பு; இதன் மூலம் நாம் பலனடைவோமாக!

நாமும் நம்முள் இந்த வீட்டை உருவாக்கிக் கொண்டேயிருக்கும் இந்த மாரவை வெறுமனே கவனித்தல் மூலம் வீழ்த்துவோம், நிராயுதபானியாக்கி பலமிழக்க வைப்போம்.

இங்குதான் விடுதலை உள்ளது. இதுவே நம் சொந்த நலனுக்கான வழியுமாகும்.

கல்யாண மித்த (கருணையுள்ள நண்பர்)

**ச.நா. கோயங்கா**